2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
நிறுவனத்தின் பெயர் : இலங்கை ஹஜ் அதிகார சபை
செலவுத் தலைப்பு இலக்கம் : 2201

உள்ளடக்கம் **பக்கம்**

அத்தியாயம் 01 – நிறுவனக் குறிப்பு/செயற்பாட்டு மேம்பாட்டு சுருக்கம்	1- 7
அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு	8 - 21
அத்தியாயம் 03 – வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை	22 - 83
அத்தியாயம் 04 – செயற்திறன் சுட்டிகள்	84
அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி நோக்கினை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை	85-86
அத்தியாயம் 06 – மனிதவளக் குறிப்பு	87 - 88
அத்தியாயம் 07 - இணக்கக்கூற்று அறிக்கை	89 - 98

அத்தியாயம் 01 – நிறுவனக் குறிப்பு /செயற்பாட்டு மேம்பாட்டு சுருக்கம்

1.1 அறிமுகம்

1972 இன் இலக்கம் கொண்ட விவசாய சட்டவாக்கல் கூட்டுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய 1978 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 302/12 கொண்ட அதிவிஷேட வர்த்தமான பத்திரிகை கட்டளையின் ஊடாக தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகார சபை (NADSA) ஸ்தாபிக்கப்பட்டது. மேற்போந்த வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அதிகார சபைக்கு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதன் பொருட்டு அதிகாரசபைக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன

1. விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் நீர் வரப்பு முகாமை பொருட்டு திட்டமிடல் தயாரித்தல் மற்றும் அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற பிரதேசங்களில் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அரசினால் இல்லையெனில் அரச சார்பற்ற பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் ஊடாக திட்டமிடல் இணைப்புச் செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.
2. கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படுகின்ற அல்லது கையளிக்கப்படுகின்ற எல்லா காணிகளினதும் உச்சத்திறன், சூழல் பாதுகாப்பு, காணி மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு மற்றும் குடியேற்ற அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நோக்கில் முகாமைத்துவம் செய்தல்
3. விவசாய உற்பத்திகளை தயார் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்
4. விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தியின் பொருட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை ஸ்தாபித்தல், அவற்றை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.
5. 1 ஆம் பந்தியில் தீர்மானிக்கப்பட்ட பிரதேசங்களில் விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் நீர் வரப்பு முகாமை செயற்படுத்துவதன் பொருட்டு அவசியம் எனக் கருதப்படும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

1991 டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 678/15 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் ஊடாக இவ்வாறு செயற்படுத்தப்பட்டு வந்த நெட்சா நிறுவனத்தின் உத்தியோகபூர்வ பெயர் இலங்கை பசுமை நில அபிவிருத்தி மத்திய அதிகாரசபை (ஹதபிம அதிகாரசபை) என திருத்தம் செய்யப்பட்டது.

இத்திருத்தத்தோடு கேகாலை மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு இருந்த அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி, பதுலை, கேகாலை மற்றும் மொனராகலை போன்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

2016 மார்ச் மாதம் 18 ஆம் திகதி 1958/72 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி பத்திரிகையின் ஊடாக இலங்கை ஹதபிம அதிகாரசபை பிரதேச அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பிற்கு கொண்டு வரப்பட்டதுடன் 2018 மே மாதம் 12 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட இலக்கம் 2070/56 இணைக் கொண்ட அதிவிஷேட வர்த்தமான அறிவித்தலுக்கு அமைய மீண்டும் விவசாய அமைச்சின் விடயப் பரப்பிற்குள் வந்தது.

2022 ஆம் ஆண்டு இலங்கை ஹதபிம அதிகாரசபை கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, பொலன்னறுவை, கம்பஹா, கொழும்பு, களுத்துரை, அனுராதபுரம், பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, அம்பாரை, திருகோணமலை மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்தியது. அத்துடன் வருட இறுதியின் போது உரியவாறு வெற்றிகரமான செயலாற்றுகையையும் அடைந்து கொண்டுள்ளது.

01. மண்ணரிப்பு மற்றும் மண் எடுத்துச் செல்லப்படுகின்ற விவசாய நிலங்களில் மண்ணரிப்பு பாதுகாப்பின் ஊடாக நிலையானதாக காணி முகாமை செய்து மண்ணின் செயற்திறனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு மண் பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபிக்கும் கருத்திட்டம் கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி பதுல்லை, மொனராகலை போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது.

02. நீண்ட காலமாக முறையற்ற விதத்தல் இரசாயன உரம் மற்றும் விவசாய இரசாயன உள்ளீடுகளை பயன்படுத்தப்பட்டு வந்த விவசாய நிலங்களிலன் உற்பத்தி திறனை மேம்படுத்தும் பொருட்டு சேதன உர பயன்பாட்டின் ஊடாக புணர் நிர்மானம் செய்யும் நோக்குடன் சேதன உர உற்பத்தி வேலைத்திட்டம் ஒன்று கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுல்லை, மொனராகலை, அம்பாரை, திருகோனமலை, கொழும்பு, கம்பஹ, களுத்துரை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது.

03. உணவு பாதுகாப்பை மேம்படுத்துதல், நஞ்சற்ற உணவு உற்பத்தியின் ஊடாக குடும்ப பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்குடன் நிலையான வீட்டுத்தோட்ட மேம்படுத்தும் வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல். இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வீட்டுத் தோட்டச் செய்கையின் பொருட்டு தேவையான விதை தொகுதியை பெற்றுக் கொள்ளல், விட்டுத் தோட்டச் செய்கையின் பொருட்டு தேவையான விவசாய உள்ளீட்டுத் தொகுதியை பெற்றுக் கொடுத்தல், நிலையான பயிர்களை பெற்றுக் கொடுத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதோடு கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுல்லை, மொனராகலை, அம்பாரை, திருகோனமலை, கொழும்பு, கம்பஹ, களுத்துரை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது.

04. விவசாய நடவடிக்கைகள் பொருட்டு குடிநீர் தேவைப்பாட்டை அடைந்து கொள்வதற்கு இயலுமாகின்ற போதிலும் பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள நீர் மூலங்களை இனங்கண்டு அந்த நீர் மூலங்களை மக்கள் மத்தியில் பயன்படுத்துவதற்கு பொருத்தமானதாக பாதுகாத்தல் மற்றும் அந்த நிர் மூலங்களை நிலையானதாக மேம்படுத்தும் பொருட்டு நீர் தாவர நடுகை மேற்கொள்வதன் ஊடாக நீர் மூலங்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம் கண்டி, கேகாலை, மாத்தளை, பதுல்லை மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டன.

05. அவ்வாறே அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு வேலைத்திட்டம் செற்படுத்தப்பட்ட கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுல்லை, மொனராகலை, அம்பாரை, திருகோனமலை, கொழும்பு, கம்பஹ, களுத்துரை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களில் கோட்டபாட்டு மற்றும் செயன்முறை பயிற்சி வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட

பண்ணையாளர்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டன. அவ்வாறே 2022 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்கள் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள பண்ணையாளர்களின் அழகியற் கலை இயலுமையை மேம்படுத்தும் பொருட்டு ‘‘ஹதபிமென் கொவிபிமட’’ எனும் பெயரில் பயிற்சி வேலைதிட்டங்கள் 7 செயற்படுத்தப்பட்டன.

06. நஞ்சற்ற முறையில் உணவு உற்பத்தியை மேம்படுத்துதல், மறக்கறிச் செய்கை உட்பட கன்று உற்பத்தி மற்றும் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துதலை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு உரிய கொத்மலை பண்ணை அபிவிருத்தி மற்றும் நாட்டுக் கோழி குஞ்சுகள் இனவிருத்தி நிலையமாக பல்லேகலை பண்ணை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு வேலைத்திட்டங்கள் இந்த வருடத்தினுள் செயற்படுத்தப்பட்டன.

07. தற்போது சந்தையில் நிலவுகின்ற முட்டை தட்டுப்பாட்டிற்கான தீர்வொன்றாக கிராமிய உழவர் சமூகத்திற்கு போசாக்கு நிலமையை உயர்த்துதல், நாளாந்த கால்நடை புரத பயன்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் மேலதிக வருமான வழிகளை உருவாக்கும் நோக்கில் கிராமிய மக்களுக்கு நாட்டுக் கோழிக் குஞ்சுகள் பெற்றுக் கொடுப்பது மற்றும் அந்த உழவர் சமூகத்துடன் ஒருங்கினைந்து அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு வேலைத்திட்டங்கள் கண்டி, ஹம்பந்தோட்டை மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன.

08. 2022 ஆம் ஆண்டு இறக்குமதி நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் செயற்திறனாக மேம்படுத்தும் பொருட்டு மின் மற்றும் அச்சு ஊடக வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. அதற்கு அமைய ஹதபிமென் கொவிபிமட எனும் பெயரில் வானொலி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுதல், ‘‘ஹதபிம கெமி சரணிய’’ மற்றும் ‘‘ஹதபிம’’ எனும் பெயரில் சிறிய பத்திரிகை ஒன்று ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கை ஆய்வுகள் மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இனைந்து வெளியிடுதல் போன்ற வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன.

09. அவ்வாறே சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை கண்காணிக்கும் பொருட்டு சகல பதவியனியினரினதும் செயற்திறனை உயர்த்துதல் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துதல், கள வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் பௌதீக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சமூக நலனோம்பல்கள் மற்றும் நிறுவன நடவடிக்கைகள் பொருட்டு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் ஒழுங்கமைப்பின் ஊடாக 2030 ஆம் ஆண்டாகின்ற போது அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நிலையான அபிவிருத்தி இலக்கினை மையமாகக் கொண்டு இலங்கை ஹதபிம அதிகார சபையின் ஊடாக இலக்கு 01 ஆன சகல இடங்களிலும் நிலவுகின்ற சகலவிதத்திலும் வறுமையை ஒழித்தல், நிலையான அபிவிருத்தி இலக்கு 02 ஆன பசியை போக்கி உணவு பாதுகாப்பு மற்றும் சிறந்த ஊட்டச்சத்து நிலையை வெற்றிக் கொண்டு நிலையானதாக விவசாயத்தை மேம்பாடு செய்தல், நிலையான அபிவிருத்தி இலக்கு 13 ஆன காலநிலை மாற்றங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்களுக்கு எதிராக விரைவாக செயற்படுத்துதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்கு 15 ஆன நிலையான புவியியல் சூழல் வளையமைப்பின் நிலையான பயன்பாடு, நிலையான கானக முகாமை, பாலைவனமாக்கலுக்கு எதிராக செயற்படுதல், புணர்நிர்மானம் செய்து பாதுகாப்பு செய்து மேம்பாடு செய்தல், மண் எடுத்துச் செல்லப்படுதல் தடுத்தல் மற்றும் புணர்நிர்மானம் செய்தல்

மற்றும் உயிரியல் பல்வகைமை அழிவுறுதலை தடுத்தல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதன் பொருட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

1.2 நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி மற்றும் நோக்கம்

இலக்கு

- நிலையான காணி மற்றும் இயற்கைவள முகாமையின் பொருட்டான சேவை திருப்பு முனையின் ஊடாக பசுமை மிக்கதோர் சூழல் நிறைந்த வளம்மிக்க நாடு"

செயற்பணி

- திறனான காணி முகாமை, முறையான நீர் பாதுகாப்பு மற்றும் உயர் மனிதவள பயன்பாட்டின் ஊடாக சூழல் வள பாதுகாப்பு மற்றும் விவசாய பொருளாதாரத்தை உயிர்ப்பிக்கும் முகமாக தேவையான பங்களிப்பை வழங்குதல்"

நோக்கங்கள்

1. விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் முழுமையான நீர் வரப்பு முகாமை பொருட்டு திட்டமிடல் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.

2. கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படுகின்ற காணிகளின் உச்சத்திறன், சூழல் பாதுகாப்பு, காணி மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு மற்றும் குடியேற்ற அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நோக்கில் முகாமைத்துவம் செய்தல்

3. விவசாய உற்பத்திகளை தயார் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

4. விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தியின் பொருட்டு தேவையான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல்

1.3 பிரதான செயற்பாடுகள்

1. மண்ணரிப்பு மற்றும் மண் எடுத்துச் செல்வதை குறைத்து நிலையாக காணிகளின் செயற்திறனை மேம்படுத்துதலின் ஊடாக 280 ஹெக்டேயர் நிலத்தில் மண் பாதுகாப்பு கட்டமைப்புக்களை ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.
2. சேதன உரப்பயன்பாடு மற்றும் பயன்பாட்டை உயர்த்துதலை நோக்ககாகக் கொண்டு சேதன உரம் 2656 மெற்றிக் தொன் உற்பத்தி செயயப்பட்டுள்ளன.
3. பயன்படுத்த முடியாது உள்ள நீர் மூலங்களை பாதுகாப்பதன் ஊடாக 12 நீர் மூலங்கள் நிலையானதாக பாதுகாக்கப்பட்டுள்ளன.
4. நிலையான வீட்டுத் தோட்டச் செய்கையை மேம்படுத்துவதன் ஊடாக நிலையான வீட்டுத் தோட்டங்கள் 5000 உழவர்களுடன் ஒருங்கினைந்து தயார் செயயப்பட்டுள்ளன.
5. அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய குடும்பங்கள் 1736 இன் பொருட்டு கோழி குஞ்சுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.
6. விவசாயிகள் பொருட்டு விடயவிதான கோட்பாட்டு மற்றும் செயன்முறை தொழில்நுட்பபயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துவதன் ஊடாக 6678 விவசாயிகள் தொழில்நுட்ப ரீதியில் உயிர்ப்பிக்கப்பட்டன.


இலங்கை ஹதபிம அதிகார சபை

2022-12-31 ஆம் திகதி அன்று உள்ளவாறான பதவியனியினர்.

தொ இல	பதவிப் பெயர்	பதவி வகுதி	அனுமதித்த எண்ணிக்கை	தற்போதுள்ள எண்ணிக்கை	வெற்றிட எண்ணிக்கை
1	நிறைவேற்றுப் பணிப்பாளர்	HM 1-1	1	1	0
			1	1	0
2	உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	MM 1-1	1	1	0
3	உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)		1	1	0
4	உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிதி)		1	1	0
5	உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்)		1	1	0
6	உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் திட்டமிடல்)		1	1	0
			5	5	0
7	நிர்வாக உத்தியோகத்தர்	JM 1-1	1	1	0
8	நிதி உத்தியோகத்தர்		1	1	0
9	கால்நடைவள மேம்பாட்டு உத்தியோகத்தர்		1	0	1
10	விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்		2	2	0
11	உள்ளக கணக்காளர்		1	0	1
12	வலய உத்தியோகத்தர்		12	12	0
			18	16	2
13	தொழில்நுட்ப உத்தியோகத்தர்	MA 2-1	1	1	0
14	முகாமை உதவியாளர் (தொழில்நுட்பம்)		35	34	1
			36	35	1
15	முகாமை உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)	MA 1-1	19	17	2
16	சிறாப்பர்		1	1	0
			20	18	2
17	சாரதி	PL 3	14	13	1
			14	13	1
18	இயந்திர செயற்பாட்டாளர்	PL 2	2	1	1
19	ஒளி,ஒலி உதவியாளர்		1	1	0
			3	2	1
20	அலுவலக உதவியாளர்	PL 1	4	4	0
21	தொழில்நுட்ப உதவியாளர்		2	1	1
22	சாரதி உதவியாளர்		3	1	2
23	காவலாளர்		4	3	1
24	தொழிலாளர்		3	2	1
25	பண்ணை தொழிலாளர்(பல்லேகலை, கொத்மலை)		12	11	1
			28	22	6
	மொத்தம்		**125**	**112**	**13**

ஹதபிம அதிகாரசபை

நிறுவன ஒழுங்கமைப்பு



அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்கு
2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் முன்னேற்றம்.

2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பொருட்டு ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு வருட இறுதியின் போது கட்டுநிதி ரூபா 76.70 மில்லியன் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஒதுக்கிய நிதி (ரூ.மி)	செலவு செய்த நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்ற வீதம்	
100		76.88	76.88

கட்டுநிதி கிடைக்கப் பெறாமை மற்றும் தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 9/2022 இற்கு அமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமையினால் 2022 ஆம் ஆண்டு பொருட்டு கையில் உள்ள பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா 5,300,537.86 செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2.1 விடய பரப்பு 01 – காணி மேம்பாட்டை உச்ச மட்டத்திற்கு கொண்டு வருதல்

2.1.1 **மண்பாதுகாப்பு கட்டமைப்பினை ஸ்தாபித்தல்**

அதிக மழை, காடழிப்பு, நிலப்பயன்பாட்டு முறையில் உள்ள மாற்றம் மற்றும் நகரமயமாக்கல் மற்றும் மனி நடவடிக்கைகள் போனற்வற்றால் மத்திய மலைநாட்டில் காணப்படுகின்ற விவசாய நிலங்கள் மண்ணரிப்பு மற்றும் மண் எடுத்துச் செல்வதன் காரணமாக பெரிதம் பாதிப்புக்கு உள்ளாகின்றன. மண்ணரிப்பு காரணமாக ஏற்படுகின்ற அவ்வாறே இதன் மூலம் ஏற்படுகின்ற இடைப் பெறுபேறாக அமைந்துவிடுவது கழுவிச் செல்லப்படுகின்ற மண் சேற்று மண்ணாக உறைந்து காணப்படுவதனால் நீர் மூலங்களில் நீரை சேமித்து வைக்கும் இயலளவு குறைந்து காணப்படுகின்றது. இதன் பெறுபேறாக நீர் மின்சார உற்பத்தியிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவ்வாறே வெள்ளப்பெறுக்கு ஏற்படுகின்ற போது ஆற்றோரங்கள் கழுவிச் செல்லல், நீர் மூலங்களில் இடையுறுகள் ஏற்படுதல் மற்றும் வறட்சி ஏற்படல் போன்றனவாகும். இலங்கையில் காணப்படுகின்ற விவசாய நிலங்களின் வளம் குன்றுதல் பொருட்டு தாக்கம் செலுத்தும் பிரதான காரணமாக அமைவது மண்ணரிப்பாகும். அதனால் மண் பாதுகாப்பு விவசாய நிலங்களில் உற்பத்தி திறனை அதிகரிப்பது அத்தியவசியமாகும்.

விவசாய காணிகளில் மண் பாதுகாப்பு செய்யப்படுகின்ற முறைகள் பின்வருமாறு 3 முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

I. பொறிமுறை பாதுகாப்பு - கல்வேலி, மண்வேலி, சிறுகாண், உறைகள், விளிம்பு தளங்கள்

II. உயிரியல் விஞ்ஞானமுறை பாதுகாப்பு - சேவெந்திரா வேலி, மூடுபயிர்கள், புல் தரைகள், மரவேலிகள், கானகச் செய்கை, காற்று தடைகள், பல்லாண்டுகால பயிர்ச் செய்கைகள்

III. தாவரவியல் பாதுகாப்பு -விளிம்புதளங்களை தயாரித்தல், சேதன உரமிடல், தழைக்கூளம் இடல், குறைந்த நிலத் தயாரிப்புக்கள், இடைப்பயிர்ச் செய்கை

விவசாய நிலங்களின் சரிவு மற்றும் தன்மையை இனங்கண்டு மண்பாதுகாப்பு முறைகளில் ஒன்றை அல்லது பலதை பயன்படுத்தி மண்ணின் செயற்திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இலங்கை ஹதபிம அதிகார சபையின் பிரதான நோக்கமாக காணப்படுவது காணிகளில் உற்பத்தி திறனை மேம்படுத்தவதாகும். அந்தவகையில் 2022 ஆம் ஆண்டு நிலத்தின் உற்பத்தித் திறனை உச்ச அளவில் பெற்றுக் கொள்கின்ற நோக்கில் விவசாய நிலங்களில் மண்பாதுகாப்பு கட்டமைப்புக்கள் ஸ்தாபிக்கப்படும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இந்த வேலைத் திட்டங்கள் இந்த ஆண்டு கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டன.

இந்த வேலைத்திட்டத்தின் 2 ஆம் கட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கு காரணமாக அமைவது 2021 ஆம் ஆண்டு இறுதியின் போது இலக்காகக் கொண்ட அளவிற்கு ஒப்பீட்டளவில் மேலும் 165 ஹெக்டேயர்களில் பாதுகாப்பு நடவடிக்கையின் பௌதீக ரீதியில் மேற்கொள்ளப்பட்டு இருந்ததோடு வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2021 இற்கு அமைய இடர் கொடுப்பனவுகளை விவசாயிகளுக்கு செலுத்த முடியாது போனமையினால் 2022 ஆம் ஆண்டு அந்த கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தமையாகும்.

2022 ஆம் ஆண்டில் விவசாயிகள் 2764 பேர் அளவில் விவசாய காணிகளில் மண் பாதுகாப்பு கட்டமைப்பு 280 ஹெக்டேயரில் பாதுகாப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்ததோடு பயனாளிகளுக்கு இடர் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு ரூபா 700 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தன. 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது அந்த இலக்கினை பூரணமாக அடைந்து கொள்ள முடியுமாயின்.

விடயப்பரப்பு	செயற்பாடு		அலகு	இலக்கு		முன்னேற்றம்	
				பௌதீக	நிதி (ரூ.மி)	பௌதீக	நிதி (ரூ.மி)
1. நிலத்தின் உற்பத்தி திறனை உச்ச அளவில் கொண்டு வருதல்	1.1	மண்பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபித்தல் - 2021	ஹெக்டேயர்	165	4.125	164.96	4.123
		மண்பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபித்தல் - 2022	ஹெக்டேயர்	280	7.00	280	7.00





வரைபடம் 1 : கண்டி மாவட்டத்தில் கங்க இஹல கோரலை பி.செ.பி. பொறிமுறை மண் பாதுகாப்பு முறையான சிறுகாண் ஸ்தாபிக்கும் வேலைத்திட்டம்.

2.1.2 சேதன உர உற்பத்தி

மண் பாதுகாப்பு மெற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் செயற்திறனை மேலும் மேம்படுத்தவதன் ஊடாக வளமான மண்ணை நிர்மானிக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டன.

சேதன உர உற்பத்தியின் பொருட்டு தேவையான தொழில்நுட்ப அறிவினை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பது இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அதன் ஊடாக விவசாயிகளின் செய்கை நடவடிக்கைகள் பொருட்டு இவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற சேதன உரத்தை பயன்படுத்திக் கொள்வதைப் போலவே சேதன உர உற்பத்தி சிற்றளவிலான முயற்சியான்மையாளர்கள் வரை உருவாக்கி கொள்வது சமூகத்தை மேம்படுத்திக் கொள்வது இயலுமாகின்ற வகையில் இவ்வேலைத்திட்த்தின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளன.

2022 ஆம் ஆண்டு சேதன உர உற்பத்தி வேலைத்திட்டம் கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுல்லை, மொனராகலை, அம்பாரை, திருகோனமலை, கொழும்பு, கம்பஹ, களுத்துரை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டு இந்த வேலைத் திட்டத்தின் 2 ஆம் கட்டமாக செயற்படுத்தப்பட்டன. அதற்கு காரணமாக அமைந்தது 2021 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தில் சேதன உரம் 651 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டுகின்ற விவசாயிகள் 651 பேர் பொருட்டு விவசாய உபகரணங்கள் பெற்றுக் கொடுப்பதற்கு வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2021 இற்கு அமைய இயலுமை காணப்படாமையினால் அந்த விவசாய உபகரணங்கள் 651 தெகுதியும் 2022 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியதாயிற்று என்பதனாலாகும்.

2022 ஆம் ஆண்டு 2656 விவசாயிகள் சேதன உரம் 1 மெ.தொன் என்ற அடிப்படையில் உற்பத்தி செய்ததுடன் அந்த விவசாயிகள் 2656 பேருக்கும் பாறை பொசுபேற்று 50 கிலோ மண்வெட்டி, மண்வாரி, தாச்சி, பூவாளி, போன்ற பொருள்கள் மற்றும் உபகரணத் தொகுதிகள் என்பவற்றை பெற்றுக் கொடுப்பதன் பொருட்டு ரூபா 18.099 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2022

ஆம் ஆண்டு இறுதியின் போது சேதன உரம் 2656 மெற்றிக் தொன் உற்பத்தி செய்த 2656 விவசாயிகள் பொருட்டு ரூபா 18.061 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து செலவிடப்பட்டு விவசாய உபகரணத் தொகுதி 2656 பெற்றுக் கொடுக்கப்பட்டன.

விடயப்பரப்பு	செயற்பாடு		அலகு	இலக்கு		முன்னேற்றம்	
				பௌதீக	நிதி (ரூ.மி)	பௌதீக	நிதி (ரூ.மி)
1. நிலத்தின் உற்பத்தி திறனை உச்ச அளவில் கொண்டு வருதல்	1.2	சேதன உர உற்பத்தியின் பொருட்டு தேவையான விவசாய உபகரணத் தொகுதியை பெற்றுக் கொடுத்தல் 2021	விவசாய உபகரணத் தொகுத	651	3.028	651	3.028
		சேதன உர உற்பத்தியின் பொருட்டு தேவையான விவசாய உபகரணத் தொகுதியை பெற்றுக் கொடுத்தல் 2022	விவசாய உபகரணத் தொகுத	576	2.271	330	2.271
				2080	15.828	2080	15.79





வரைபடம் : 02 சமூக பங்குபற்றுகையுடன் மேற்கொள்ளப்படுகின்ற சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டை பிரபல்யப்படுத்தும் வேலைத்திட்டம்.




வரைபடம் 03: கொழும்பு மாவட்டத்தில் கெஸ்பேவ பி.செ.பி. மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் பதவிசிறிபுர பி.செ.பி. சேதன உர உற்பத்தி வெற்றிகரமாக உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு விவசாய உபகரணத் தொகுதியை பெற்றுக் கொடுத்தல்.

2.1.3 "பொருளாதாரத்திற்கு செல்வம் - நிலையான வீட்டுத் தோட்டம்" எனும் தொனிப்பொருளில் வீட்டுத்தோட்டச் செய்கையை மேம்படுத்தும் பொருட்டு மறக்கறி விதைகள், பழச்செடிகள், உள்ளிட்ட நிரந்தர பயிர்கள், மற்றும் விவசாய உபகரணத் தொகுப்புக்கள் போன்றவற்றை விவசாயிகளிடையே வினியோகித்தல்.

உணவு பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் நஞ்சற்ற உணவு உற்பத்தி செய்தலை நோக்காகக கொண்டு "பொருளாதாரத்திற்கு செல்வம் - நிலையான வீட்டுத் தோட்டம் எனும் தொனிப்பொருளின் கீழ் நிலையான வீட்டுத் தோட்டச் செய்கை மேம்பாடு செய்யும் வேலைத்திட்டம் 2022 ஆம் ஆண்டு கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுல்லை, மொனராகலை, அம்பாரை, திருகோனமலை, கொழும்பு, கம்பஹ, களுத்துரை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் ஹம்பந்தோட்டை போன்ற மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் 5000 விவசாயிகளுக்கு வீட்டுத் தோட்டச் செய்கையின் பொருட்டு தேவையாகின்ற மறக்கறி விதைத் தொகுதியை பெற்றுக் கொடுத்தல், வீட்டுத் தோட்டச் செய்கை விவசாய உள்ளீட்டு தொகுதிகளை பெற்றுக்கொடுத்தல் (நாற்றுமேடை தட்டுக்கள் மற்றும் திரவ விசிறல் உபகரணங்கள்), பழச்செடிகள், தென்னங்கன்றுகள், தேசிக்காய் செடிகள் மற்றும் பாக்குச் செடிகள் போன்ற நிலையான பயிர்கள் பெற்றுக் கொடுத்தல் போலவே வீட்டுத் தோட்டச் செய்கை பொருட்டு தேவையான தொழில்நுட்ப அறிவினை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தல். இந்த வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா 25.0633 நிதி ஒதுக்கீடு 2022 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் வருட இறுதியின் போது ரூபா 15.46 மில்லியன் ஒதுக்கீடு நிதி தொகை 2022 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு வருட இறுதியின் போது ரூபா 15.46 மில்லியன் ஒதுக்கீடு நிதி செலவு செய்யப்பட்டு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

விடயப்பரப்பு	செயற்பாடு		அலகு	இலக்கு		முன்னேற்றம்	
				பௌதீக	நிதி (ரூ.மி)	பௌதீக	நிதி (ரூ.மி)
1. நிலத்தின் உற்பத்தி திறனை உச்ச அளவில் கொண்டு வருதல்	1.3	வீட்டுத் தோட்டச் செய்கையை மேம்படுத்தும் பொருட்டு வீட்டுத் தோட்ட செய்கை விதை, பழச்செடிகள் உறள்ளிட்ட நிலையான பயிர் தொகுதியை விவசாயிகளளுக்கு வினியோகித்தல்	விதை தொகுதி	5183	0.5183	5183	0.518
			வீட்டுத்தோட்ட உள்ளீட்டு தொகுதி	5000	22.59	5000	13.037
			தென்னங்கன்று	4000	1.20	3300	1.14
			தேசிக்காய் செடி	5100	0.255	5100	0.255
			பாக்கு கன்று	10000	0.50	10000	0.495




வரைபடம் 04: பதுளை மாவட்டத்தில் வெலிமடை பி.செ.பி. மற்றும் திருகொணமலை மாவட்டத்தின் பதவிசிறிபுர பி.செ.பி. வீட்டுத் தோட்டச் செய்கையின் கீழ் விவசாயிகளால் தயார் செய்யப்பட்ட வீட்டுத் தோட்டம்.




வரைபடம் 05: கொழும்பு மாவட்டத்தின் மஹரகம பி.செ.பி. மற்றும் மாத்தளை மாவட்டத்தின் உக்குவலை பி.செ.பி. வீட்டுத் தோட்ட செய்கை மேம்படுத்தம் பொருட்டு வீட்டுத் தோட்டச் செய்கை மேம்படுத்தவதால் விதை, பழச்செடி உட்பட நிலையான பயிர் தொகுதியை விவசாயிகளுக்கு வினியோகித்தல்

விடய தலைப்பு 02 - **ஒருங்கிணைந்த நீர் வரப்பு முகாமை**

2.2.1 **நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகள் பாதுகாப்பு**

பல்வேறு மனித செயற்பாடுகளின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நீர் மூலங்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள சூழல் முறையை பாதுகாப்புச் செய்தல், நீர்வாழ் தாவரங்களை நடுவதன் ஊடாக பல்லுயிரினங்களை பாதுகாப்புச் செய்தல், அந்த பிரதேசத்தில் மக்களது குடிநீர் தேவைப்பாட்டை அடைந்து கொள்ளுதல் மற்றும் அவர்களுக்கு விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான நீர் வழங்கள் போன்றவற்றை நோக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பணிமனைகளில் நீர் மூலங்கள் 8 பாதுகாப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்ததோடு அதன் பொருட்டு ரூபா 8.00 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆயினும் 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி தொகை யினால் நீர் மூலங்கள் 12 நிலையானதாக பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளதோடு அதன் ஊடாக விவசாய குடும்பங்கள் 300 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் தமது விவசாய மற்றும் குடிநீர் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். அங்கு நீர் மூலங்கள் பாதுகாப்பு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி தொகை வருட இறுதியின் போது ரூபா 7.430 மில்லியன் நிதி தொகை செலவு செய்து நீர் மூல பாதுகாப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அவ்வாறே பாதுகாப்பு செய்யப்பட்ட நீர் மூலங்கள் நிலையான தன்மையை பாதுகாத்துக் கொள்வதன் பொருட்டு நீர் வாழ் உயர்தர தாவரங்கள் 1217 மற்றும் பிற நீர் வாழ் தாவரங்கள் செடிகள் 2215 உரிய நீர் மூலங்களில் நடுகை செய்யப்பட்டது. அந்த நீர்வாழ் செடிகள் பொருட்டு 2022 ஆம் ஆண்டு ரூபா 0.8027 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருட இறுதியின் போது அந்த செடிகள் பெற்றுக் கொடுப்பதன் பொருட்டு ரூபா 0.8026 செலவு செய்யப்பட்டு இருந்தன.

விடயப்பரப்பு	**செயற்பாடு**		**அலகு**	**இலக்கு**		**முன்னேற்றம்**	
				பௌதீக	**நிதி (ரூ.மி)**	**பௌதீக**	**நிதி (ரூ.மி)**
2. ஒருங்கிணைந்த நீர் முகாமை	2.1	நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகள் பாதுகாப்பு	நீர் மூலங்கள்	8	8.00	12	7.43
	2.2	நீர் நிலங்களின் பாதுகாப்பு பொருட்டு நீர்வாழ் செடிகளை நீர்மூலங்களில் நடுதல்	செடிகள்	3884	0.1942	2215	0.1941
			தாவர உயர்தரம்	1217	0.6085	1217	0.6085

பாதுகாப்பு செய்யப்பட்ட நீர் நிலைகள்

தொ.இல	மாவட்டம்	பி.செ.பி.	கி.உ.பி.	பாதுகாப்பு செய்யப்பட்ட நீர் நிலைகள்
1	கேகாலை	அரனாயக்க	கல்அதர	கஹகொடுவ கிணறு
2	கண்டி	ஹரிஸ்பத்துவ	உக்கல்ல	எலகல்ல நீராடும் பீலி
		கங்கஇஹல கோரலை	ஏத்கால கிழக்கு	எத்கால லக்ஷபீலி
		உடபலாத	வகுபிடிய	நீர்குமிழி இருப்பு பாதுகாப்பு
3	மாத்தளை	ரத்தொட்டை	நிகவெல்ல	நிகவெல்ல நீர் போசனை பிரதேசத்தை பாதுகாத்தல்
4	ஹம்பந்தோட்டை	வலஸ்முல்ள	யஹல்முல்ல	ஏன்தேகும்புர நீர் குமிழி திருப்பும் பொருட்டு அணைக்கட்டு நிர்மானித்தல்.
5	மொனராகலை	தனமல்வில	கிவுல்ஆர	கிவுல்ஆர விவசாய கிணறு அபிவிருத்தி
		தனமல்வில	சீனுக்குவ	சீனுக்குவ நீராடும் நிலையம்
6	ஹம்பந்தோட்டை	திஸ்ஸமஹராம		திஸ்ஸமஹாராம கிழக்கு ஆரம்ப பாடசாலை குடிநீர் பெற்றுக் கொடுத்தல்
7	நுவரெலியா	கொத்மலை		கொத்மலை நீர்த்தேக்க பாதுகாப்பு பொருட்டு மதிலில் பிதலி பொருத்தல்.
		கொத்மலை		காணில் கல்வேளி இடுதல்
8	கண்டி	குண்டசாலை		பல்லேகலை நீர்தேக்கத்திற்கு அன்மையில் நீர் கருத்திட்டத்தின் நீரு பம்ப் செய்யும் நிலைய நிர்மான வேலைத்திட்டம்.





பாதுகாப்புக்கு முன் பாதுகாப்பின் பின்

வரைபடம் 06: கண்டி மாவட்டத்தின் கங்கஇஹல கோரளை லக்ஷபீலி




வரைபடம் 07 : கம்பஹ மாவட்டத்தின் அத்தனகலை பி.செ.பி. மற்றும் மீரிகம பி.செ.பி.நீர் மூலங்களின் நிலையாக பாதுகாப்பு செய்தலை நோக்காகக் கொண்டு நீரின் உயர்தர தாவரங்களை நடுதல்

விடயப் பரப்பு 03 : தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டத்தை நடாத்துதல்

3.1.1. விவசாய மக்கள் பொருட்டு தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

2022 ஆம் ஆண்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு இனங்காணப்பட்ட சகல பயனாளிகளையும் இலக்காகக் கொண்ட விவசாய சமூகத்தை அறிவூட்டும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டன. மண் பாதுகாப்பு, சேதன உர உற்பத்தி, மற்றும் அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு தொடர்பான பயனாளிகளை இலக்காகக் கொண்டு கோட்பாட்டு மற்றும் செயன்முறை பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இங்கு பயனாளிகள் 5880 பேரை இலக்காகக் கொண்டு தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தும் பொருட்டு ரூபா 0.882 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வருட இறுதியின் போது தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து பயனாளிகள் 6678 பேர் பொருட்டு பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டதுடன் அதன் பொருட்டு ரூபா 0.867 மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளன.

அவ்வாறே விவசாய சமூகத்தின் தொழில்நுட்ப அறிவினை உயிர்ப்பிப்பு செய்வதன் கீழ் அவர்களது அழகுக்கலை இயலுமையை மேம்படுத்தும் பொருட்டு "ஹதபிமென் கொவிபிமட" எனும் பெயரில் தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் கண்டி, கேகாலை, பதுல்லை, கொழும்பு மற்றும் ஹம்பந்தோட்டை மாவட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டு "ஹதபிமென் கொவிபிமட" வேலைத்திட்டம் 07 நடாத்துவதை இலக்காகக கொண்டு இருந்ததோடு அதன் பொருட்டு ரூபா 0.525 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கு அமைய வருட் இறுதியின் போது "ஹதபிமென் கொவிபிமட" வேலைத்திட்டம் நடாத்தப்பட்டதோடு அதன் பொருட்டு ரூபா 0.497 நிதி செலவு செய்யப்பட்டது.

விடயப்பரப்பு	செயற்பாடு		அலகு	இலக்கு		முன்னேற்றம்	
				பௌதீக	நிதி (ரூ.மி)	பௌதீக	நிதி (ரூ.மி)
3. தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டத்தை நடாத்துதல	3.1	விவசாய மக்கள் பொருட்டு தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்ததல்.	விவசாயிகள்	5880	0.88	6678	0.86
	3.2	‘‘ஹதபிமென் கொவிபிமட’’ தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டம் நடாத்ததுல்	பயிற்சி வேலைத்திட்டங்கள்	7	0.525	7	0.497





வரைபடம் 08 : பதுலை மாவட்டத்தின் வெலிமடை பி.செ.பிரிவு மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பி.செ.பி. என்பவற்றில் தொழில்நுட்ப பயிற்சி வேலைத் திட்டங்களை நடாத்துதல்.





வரைபடம் 09: பதுளை மாவட்டத்தில் வெலிமடை பி.வெ.பி. ஹதபிமென் கொவிபிடமட அழகியற்கலை பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்

விடயப்பரப்பு 4 : கிராமிய மக்களின் போசனை தேவைப்பாட்டை அடைந்து கொள்ளல் மற்றும் வருமானம் உழைத்தல்.

4.1.1. அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு முறையை பிரபல்யப்படுத்துதல்.

புரத சக்தி குறைபாடானது கிராமிய மக்கள் மத்தியில் நிலவுவது ஒரு பாரிய பிரச்சினையாக தற்போது உருவாகி உள்ளது. அதனால் கிராமிய மக்களது நாளாந்த கால்நடை புரத பயன்பாட்டை உயர்த்துதல் மற்றும் அவர்களது மேலதிக வருமான வழிகளை உருவாக்குதல் என்பவற்றை இலக்காகக் கொண்டு அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு வேலைத்திட்டம் கிராம மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பது இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டம் கண்டி ஹம்பந்தோட்டை மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகின்றன. அத்துடன் கோழிக்குஞ்சுகள் 17770 கிராமிய மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. அதன் பொருட்டு ரூபா 9.117 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது கோழிக்குஞ்சுகள் 17360 விவசாய குடும்பங்கள் 1736 மத்தியில் வினியோகிக்கப்பட்டது. அதற்காக ரூபா 8.766 நிதி தொகை செலவிடப்பட்டது.

விடயப்பரப்பு	செயற்பாடு		அலகு	இலக்கு		முன்னேற்றம்	
				பௌதீக	நிதி (ரூ.மி)	பௌதீக	நிதி (ரூ.மி)
4. கிராமிய மக்களின் போசனை தேவைப்பாட்டை அடைந்து கொள்ளல் மற்றும் வருமானம் உழைத்தல்.	4.1	அரை இல்ல முறையிலான கோழி வளர்ப்பு முறையை கிரபல்யப்படுத்துதல்.	கோழி குஞ்சுகள்	17700	9.117	17360	8.766





வரைபடம் 09: ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பி.செ.பி.கிராமிய மக்களது போசனை தேவைப்பாட்டை அடைந்துக் கொள்ளும் முகமாகவும் மற்றும் வருமானம் உழைப்பதற்குமாக கோழி குஞ்சு வழங்கும் வெலைத்திட்டம்.

விடயப்பரப்பு 05 – விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் வேலைத்திட்டம்

5.1.1 பண்ணை அபிவிருத்தி – பல்லேகலை

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் பிரதான வருமான ஈட்டும் கருத்திட்டம் இதுவாகும். விஷேடமாக கோழிக்குஞ்சுகள் இனவிருத்தி நிலையமாக நடாத்திச் செல்லப்படுகின்ற இந்த பண்ணையில் அரை இல்ல முறையிலான கோழிக்குஞ்சுகளை இனவிருத்தி செய்வது, பயிர்ச் செய்கை மற்றும் கறவை மாட வளர்ப்பு என்பன மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகள் பொருட்டு ரூபா 1.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது பண்ணையின் பொருட்டு அத்தியவசியமான அங்கமாக காணப்பட்ட பண்ணை வீதி வளையமைப்பை புதுப்பித்தல். கோழி வளர்ப்பின் பொரட்டு தேவையான Debeaker உபகரணத்தை கொள்வனவு செய்தல் மற்றும் UV filter கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூபா 1.407 மில்லியன் செலவு செய்து அபிவிருத்தி நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டன.





வரைபடம் 10: பல்லேகலை பண்ணையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கோழி வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்தி வேலைத்திட்டம்.

5.1.2 பண்ணை அபிவிருத்தி – கொத்மலை

இலங்கை ஹுதபிம அதிஹாரசபையின் ஏனைய பிரதான வருமான உழைக்கும் கருத்திட்டமாக அமைவது இதுவாகும். ஒருங்கினைந்த பண்ணை எண்ணக்கருவின் கீழ் மாதிரி பண்ணையாக நடாத்திச் செல்லப்படுகின்ற இந்த பண்ணையின் ஊடாக பயிர்ச் செய்கை, நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு கொத்மலை பண்ணை அபிவிருத்தி பொருட்டு ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 1.103 மில்லியன் செலவிடப்பட்டு பண்ணை பாதுகாப்பு பொருட்டு பாதுகாப்பு வேலி நிர்மானித்தல் மற்றும் புதிய பாதுகாப்பு இல்லமுறை ஒன்றை நிர்மானித்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டன.





வரைபடம் 11: கொத்மலை பண்ணையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற செடி உற்பத்தி வேலைத்திட்டம்.

விடயப்பரப்பு 06 : விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், வனிக அடிப்படையில் முதலீட்டாளர்களினால் செயற்படுத்தப்படுகின்ற பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய செய்கைகள் பொருட்டு வசதிகள் மற்றும் சேவைகள் வழங்குதல்

இளைஞர் சமூகத்தை விவசாய துறையில் ஈடுபடுத்துதல் நிமித்தம் தேவையான நவீன விவசாய தொழில்நுட்ப அறிவினை மற்றும் வசதிகளையும் வழங்குதல், உணவு பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் விவசாய உற்பத்திகளின் விலை தளம்பலை கட்டுப்படுத்துதல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு வர்த்தக மட்டத்தில் விவசாயத்தை ஊக்குவித்தலை நோக்காகக் கொண்டு முயற்சியான்மையாளர்கள் பொருட்டு பாதுகாப்பு இல்லங்கள் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் ரூபா 9.00 மில்லியன் செலவு செய்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் ஒதுக்கீடு கிடைக்காமையால் இந்த கருத்திட்டம் 2022 ஆம் ஆண்டு செயற்படுத்துவதற்கு முடியாது போயின

விடய பரப்பு 07: நிறுவன நடவடிக்கைகள் மற்றும் சேவையினை உச்ச அளவில் மேம்படுத்துதல்

7.11 மின் மற்றும் அச்சூடக் வேலைத்திட்டத்தை செயற்படுத்ததல்.

இலங்கை ஹுதபிம அதிஹாரசபையின 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்க்கள் தொடர்பாக இலங்கை மக்களை அறிவூட்டும் பொருட்டு இந்த மின் மற்றும் அச்சூடக வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டு ரூபா 1.60

மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டு மலையக FM. வானொலியுடன் இனைந்து "ஹதபிம கெமி சரனிய" வேலைத்திட்டம் 1 மற்றும் "ஹதபிமென் கொவிபிமட" வானொலி நிகழ்ச்சிகள் 06 உம் ஒலிபரப்பு செய்யப்பட்டன. அவ்வாறே இலங்கை ஹதபிம அதிகாரசபை மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகளுக்கான ஆய்வு நிலையத்துடன் இணைந்து ஹதபிம எனும் பெயரில் சிறிய பத்திரிகை ஒன்றும் வெளியிடப்பட்டது. ஆதற்கு அமைய 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது இலக்காகக் கொண்ட சகல வேலைத்திட்டங்களும் முடிவுறுத்தப்பட்டதோடு அதன் பொருட்டு ரூபா 1.587 மில்லியன் செலவிடப்பட்டது.

7.1.2 மாதாந்த செயலாற்றுகை மீளாய்வு ஒன்றுகூடல்களை நடாத்துதல்.

2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை கள பதவியனியினர் மற்றும் நிறுவன தலைவர்களது தலைமையில் மாதாந்தம் மீளாய்வு செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு மாதாந்த செயலாற்றுகை மீளாய்வு வேலைத்திட்டங்கள் 12 இனை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் அதன் பொருட்டு ரூபா 0.356 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆதற்கு அமைய 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது செயலாற்றுகை மீளாய்வு ஒன்றுகூடல்கள் 7 இடம் பெற்றதுடன் அதன் பொருட்டு ரூபா 0.355 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளன.

7.1.3 நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி

நிறுவனத்தின் பதவியனியினரின் இயலுமை மற்றும் திறன்களை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் அவர்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட அறிவினை பெற்றுக் கொடுக்கும் பொருட்டும் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டு பயிற்சி வேலைத்திட்டங்கள் பொருட்டு ரூபா 0.90 மில்லியன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டன. ஆத்துடன் வருட இறுதியின் போது ரூபா 0.654 நிதி செலவு செய்யப்பட்டு பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

7.1.4 பௌதீக வ ள அபிவிருத்தி

இலங்கை ஹதபிம அதிஹாரசபையின் பிரதான பணிமனை பொருட்டு தேவையான அலுவலக உபகரணங்கள் மற்றும் மின்தொகுதிகள் கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தல் பொருட்டு 2022 ஆம் ஆண்டு ரூபா 5.751 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்து நிறுவனத்திற்கு தேவையான பௌதீக வளங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்ட பிரதான பணிமனையின் நுழைவு வீதி நவீனமயப்படுத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டு இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு பொதுத் திறைசேரியினால் ரூபா 76.70 மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதோடு அந்த நிதி ஒதுக்கீடு அளவினை திறனாக பயன்படுத்தி ரூபா 76.88 மில்லியன் ஒதுக்கீடு செலவு செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அவ்வாறே 5,300,537.86 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் கையில் உள்ளன.

இலங்கை ஹுதபிம அதிகாரசபை

இறுதிக் கணக்குகள்
2022

விவசாய அமைச்சு

කෘෂිකර්ම අමාත්‍යාංශය

ශ්‍රී ලංකා හදබිම අධිකාරිය

කැ. පෙ. 09, ගන්නෝරුව , පේරාදෙණිය

සභාපති : 0812 – 388075 නියෝජ්‍ය සභාපති : 0813 - 992726 විධායක අධ්‍යක්ෂ : 0812 - 388343 පොදු : 0812 - 388107

–

கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு பணிமனை
306 / 72, பொல்துவ வீதி
பத்தரமுல்லை

அன்புடையீர்,

2022.12.31 ஆம் திகதி அன்று உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள்

2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக்கணக்குகள் இத்துடன் சமர்ப்பிக்கின்றோம். ஹதபிம அதிகார சபையின் இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் அரசாங்க அலகின் கணக்கீட்டு தரக்ககுழுவினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை அரச அலகு கணக்கீட்டு தரங்களுக்கு (SLPSAS) அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படிக்கு,
உண்மையுள்ள

சரத் சந்திரசிறி விதான
தலைவர்
(ஓய்வு பெற்ற - இ.நி.சே. – விஷேடதரம்)

இலங்கை ஹுதபிம அதிகாரசபை
இறுதிக் கணக்கு – 2022.12.31

இலக்கம்	விபரம்	பக்க இலக்கம்
1.	நிதி நிலபரக்கூற்று	25
2.	கணக்கீட்டு கொள்கை	26
3.	நிதிச் செயலாற்றுகை	31
4.	நிதிப்பாய்ச்சல் கூற்று	32
5.	உரிமை மாற்றம் தொடர்பான கூற்று	33
6.	நிதி நிலபரக்கூற்றுகளின் குறிப்புக்கள் மற்றும் உப அட்டவணை	34 - 74

இலங்கை ஹுதபிம அதிகாரசபை

2022. 12. 31 ஆம் திகதி அன்றுள்ளவாறான நிதிக்கூற்று

2021 (ரூ) மொத்தம்	சொத்துக்கள்	குறிப்பு	2022 (ரூ) மொத்தம்
	நடைமுறையல்லா சொத்துக்கள்		
48,296,993.91	சொத்துக்கள் பொறி மற்றும் உபகரணங்கள்		67,895,828.14
1,903,450.00	உயிரியல் சொத்துக்கள்	குறிப்பு 01	1,699,750.00
16,807,719.25	வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்	குறிப்பு 03	18,510,683.19
0.00	நிலையான சொத்துக்கள்		0.00
67,008,163.16	மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**88,106,261.33**
	நடைமுறை சொத்துக்கள்		
4,482,021.81	கையிறுப்பு	குறிப்பு 02	20,775,067.26
11,910,969.35	வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்கள்	குறிப்பு 03	11,497,053.35
311,955.45	ஆரம்ப கொடுப்பணவுகள்	குறிப்பு 04	311,955.45
661,780.01	பாதுகாப்பு வைப்பு	குறிப்பு 05	759,032.87
-	சேமிப்பு வைப்புக்கள்	குறிப்பு 07	-
28,801,001.30	வங்கி மீதி	குறிப்பு 07	21,152,939.00
46,167,727.92	மொத்த நடைமுறை சொத்துக்கள்		**54,496,047.93**
113,175,891.08	**மொத்த சொத்துக்கள்**		**142,602,309.26**
	பொறுப்புக்கள்		
	நடைமுறை பொறுப்புக்கள்		
5,218,293.59	வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்கள்	குறிப்பு 06	2,368,439.84
7,472,960.42	உறப்படும் செலவுகள்	குறிப்பு 08	7,114,305.82
2,051,792.50	உபகாரத் தொகைக்கான ஏற்பாடு	குறிப்பு 09	2,242,275.00
661,780.01	பாதுகாப்பு வைப்பு	குறிப்பு 05	759,032.87
15,404,826.52	மொத்த நடைமுறை சொத்துக்கள்		**12,484,053.53**
	நடைமுறையல்லா பொறுப்புக்கள்		
23,285,845.00	உபகாரத் தொகைக்கான ஏற்பாடு	குறிப்பு 09	25,567,470.00
10,252,731.84	வர்த்தக மற்றும் ஏனைய வருவாய்கள்	குறிப்பு 06	8,754,510.22
130,000.00	வாகனக் கடன்		49.791.72
33,668,576.84	மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**34,371,771.94**
49,073,403.36	**மொத்த பொறுப்புக்கள்**		**46,855,825.47**
64,102,487.72	**தேறிய சொத்துக்கள்**		**95,746,483.79**
	மொத்த சொத்துக்கள / සම ඔකාටසී		
28,602,814.31	அரச கொடை கணக்கு		48,400,605.89
992,091.51	ஒதுக்கீட்டுக் கணக்கு		992,091.51
1,087,229.82	மூலதன ஒதுக்கீடுகள்		1,087,229.82
2,091.97	ஜி.ரி.இஸட் கொடை		2,091.97
20,622,216.59	மீள்மதிப்பீட்டுக் கணக்கு		20,622,216.59
12,796,043.52	மேலதிகம்/பற்றாக்குறை		24,642,248.01
64,102,487.72	**தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை**		**95,746,483.79**

02 முதல் 06 ஆம் பக்கத்தில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதிகளான பக்கம் 16 முதல் 54 வரையிலான குறிப்புக்கள் தாடர்பாக தயாரிப்பதிலும் இந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதிலும் பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது. அத்துடன் இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

……..	……..	……..	……..
ஏ.ஏம்.டப்லியு.பி.திலகரத்ன	டப்லியு.எம்.கே.கருணாரத்ன	சபை உறுப்பினர்	சரத்சந்திரசிறி விதான
உதவிப் பணிப்பாளர் நிதி	நிறைவேற்றுப் பணிப்பாளர		தலைவர்

தயாரிப்பு : பீ.கே.கெட்டகும்புர
முகாமை உதவியாளர்

சரிபார்த்தவர் - டப்லியு.எம்.எம்.எம்.ஆரியரத்ன
நிதி உத்தியோகத்தர்

கணக்குகளுக்கான குறிப்புக்கள்

01. **கூட்டுத் தகவல்கள்**

1.1 1972 இன் 11 ஆம் இலக்க விவசாய கூட்டுச் சட்டத்தின் கீழ் (NADSA) 1978 பெப்ரவரி 1 ஆம் திகதிய இலக்கம் 302/12 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகார சபையாக ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை ஹதபிம அதிகார சபையானது ஏனைய அரச முயற்சியான்மை நிறுவனங்களில் "E" உப வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.2 2022 ஆம் ஆண்டு இறுதியின் போது இந்த அதிகார சபையின் ஊழியர்களது எண்ணிக்கை 109 ஆகும்.

1.3 இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு பொது திறைசேரியிடம் இருந்து பிரதானமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

1.4 பொது திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து சம்பளம் பெறுகின்ற ஊழியர்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய தேவையானவற்றை வழங்குவது பண்ணைகள் ஊடாகவும் செயற்படுத்தப்படுவதுடன் பண்ணையால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய செலவுகளும் பண்ணை வருமானத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன (கொத்மலை மற்றும் பல்லேகலை).

1.5 2019 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் சந்தைப்படுத்தல் கருத்திட்டம், ஹதபிம கூட்டுறவு சங்கத்திற்கு கையளிக்கப்பட்டது.

1.6. ஹதபிம அதிகாரசபையினால் 2022 செப்டம்பர் 24 ஆம் திகதி புதிய விற்பனை நிலையம் ஒன்று வராப்பிடியில் திறந்து வைக்கப்பட்டது. நிதி மூலதனம் இலங்கை ஹதபிம அதிகாரசபையினால் கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஆந்த நிதி தொகையானது ரூபா 2.1 மில்லியன்களாகும். இதன் பொருட்டு அனுமதியை பயிப்பாளர் சபையினால் உரிய 460 ஆவது பணிப்பாளர் சபை ஒன்றுகூடலின் போது பெற்றுக் கொடுக்கப்பட்டது.

02 **பொதுவான கணக்கீட்டு கொள்கைகள்**

2.1 இலங்கை ஹதபிம அதிகார சபையின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தனியார் துறை கணக்கீட்டுத் தரக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு தரத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 இலங்கை ஹதபிம அதிகார சபையின் நிதி ஆண்டானது அண்டின் டிசம்பர் 31 இல் முடிவடைகின்றது.

2.3 நிதி நிலமை அறிக்கை, நிதி செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்கள்/பங்குகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கள் என்பன SLPSAS 01 உடன் தொகுக்கப்படுகின்றன.

2.4 150 ஆவது சுற்றறிக்கைக்கு அமைய பாவணையில் இல்லாத வாகன நீக்கலில் இருந்து பெறப்பட்ட வருமானம் திறைசேரியின் வருவாய்க்கு உட்படுத்தப்படுகின்றன.

03. சொத்துக்கள்

3.1 திருத்தச் செலவுகள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் நிதிச் செயலாற்றுகை கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. ஏதாவது மீள் மதிப்பீட்டு மேலதிகங்கள் சொத்து மீள் மதிப்பிட்டு ஒதுக்கத்தில் திறன்ட பங்குகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

3.2 வருடத்தினுள் கொள்வனவு செய்யப்படுபவற்றிற்கு 2016 ஆம் ஆண்டு வரையில் தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்க வில்லை. ஆனால் பெறப்படுகின்ற சகல சொத்துக்களுக்குமான (மோட்டார் சைக்கிலை தவிர) மாத ஆரம்பத்திலேயே அதிகார சபையினால் தேய்விடப்படுகின்றன. பாவணைக்காக உள்ள சொத்துக்கள் மற்றும் அழிக்கப் பெறும் திகதியின் தேய்மான ஏற்பாடுகள் மற்றும் மாத ஆரம்பத்தில் இருந்தே மோட்டார் வாகனங்களுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

3.3 2012 ஆம் ஆண்டு வரையில் நாம் மூலதன முறையிலான தேய்மான கொள்கையை நாம் பின்பற்றினோம். அத்துடன் 2013 ஆம் ஆண்டில் இருந்து மீண்டுவரும் முறையில் அதனை மாற்றம் செய்தோம்.

3.4 அதிகார சபையானது தேய்மானங்களுக்கான ஏற்பாடு நேர்கோட்டு முறையில் பின்வரும் வீதங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாகனங்கள்	-	25%
அலுவலக உபகரணங்கள்	-	10%
கட்டடம்	-	2.5%
தளபாடமும் பொருத்துக்களும்.	-	7.5%
விவசாய கருவிகள்	-	10%
மோட்டார் சைக்கில்	-	20%

3.5 கட்டட வளாகம் - இலங்கை ஹதபிம அதிகார சபைக்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி கட்டடங்கள் மீதான சட்டபூர்வமான உரிமை காணப்படவில்லை.

- கண்டி கண்ணொறுவையில் அமையப் பெற்றுள்ள பணிமனை கட்டடம் மற்றும் காணி
- பல்லேகலை மற்றும் கொத்மலையில் அமையப் பெற்றுள்ள பண்ணைகளின் காணிகள்

- 30 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வெலிகமையில் அமையப் பெற்றுள்ள விற்பனை நிலையததின் காணி மற்றும் கட்டடம்.
- வராபிடி காணி மற்றும் விற்பனை நிலையம்

3.6 குறைந்த செலவு அல்லது தேறிய நிறைவேற்ற பெறுமதியில் பதிவேடுகள் காணப்படுகின்றன.

3.7 காசு மற்றும் சாசு சமங்கள் என்பன கையில் உள்ள காசு, வங்கியில் உள்ள காசு குறுகிய கால முதலீடுகள் என்பவற்றை வரைவிலக்கனப்படுத்துகின்றன

3.8 காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் நோக்கத்திற்காகவும், கையில் உள்ள மற்றும் வங்கியில் உள்ள வைப்புக்களின் உள்ளடக்கியுள்ள காசு மற்றும் காசு சமநிலைகள் உள்ளடங்கப்படுகின்றன.

3.9 கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகின்ற போதும் பயன்படுத்தப்படாது உள்ள நிலையில் காணப்படுகின்றது.

சொத்துக்கள் பற்றிய விபரம்	வாகண இலக்கம்	பெறுமதி ரூபா	குறிப்பு
இரண்டு சக்கர கை டெக்டர் டிகிரா	-	195,000	பல்லேகலை பண்ணையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

3.10 2022 ஆம் ஆண்டு இலங்கை ஹுதபிம அதிகாரசபை ரூபா 7,648,599.31 பெறுமதியான சொத்துக்கள் திறைசேரியின் நிதியை பயன்படுத்தி கொள்வனவு செய்துள்ளது.

04 பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகள்

4.1 செலுத்த வேண்டிய செலுத்தல்கள்

செலுத்த வேண்டிய செலுத்தல்கள் அவற்றினது செலவிற்கு அமைய குறிப்பிடப்பட்டுள்ளன.

4.2. பணிக் கொடை

பணிக்கொடை நலத்திட்டத்தில் வரைவிலக்கனப்படுத்தப்பட்டுள்ன. உரிய நியதிச்சட்டத்திற்கு அமைய பணிக்கொடைகள் வழங்குவதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது. இந்த பொறுப்புக்களை அடைந்து கொள்ளும் முகமாக சேவையில் முதலாவது வருடத்தில் சேவை ஆரம்பத்தில் இருந்தே ஒவ்வறெ முழுமைப்படுத்தப்பட்ட சேவை வருடத்திற்காகவும் சகல ஊழியர்களுக்கும் நிதி ஆண்டின் கடைசி மாதத்தில் மாத வேதன அடிப்படையில் கணக்கிடப்படுகின்ற ஒரு தொகைக்குச் சமமாக ஐந்தொகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வருட ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட மீதிக்கும் வருட இறுதியில் கொண்டு செல்லப்பட்ட மீதிக்கும் இடையே காணப்படும் வித்தியசமான பெறுபேறு வருமான கூற்றில் மேற்கொள்ளப்படும். பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் LKAS ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆகக் குறைந்தது ஒரு வருடத்தினையாவது பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கே

கணக்கிடப்படுகின்றன. இலங்கை ஹதபிம அதிகாரசபை பணிக்கொடை திட்டத்திற்கு துனையாக நிதி ஏதும் முதலீடு செய்யவில்லை. முற்பணமாக பொது திறைசேரியினால் நிதி விடுவிக்கப்படுவதும் இல்லை. ஆனால் பதவியனியினரின் பணிக்கொடைக்கு துனையாக எந்த ஒரு நிதியும் இலங்கை ஹதபிம அதிகாரசபையினால் முதலீடு ஏதும் செய்யப்படுவதும் இல்லை எவ்வாறாயினும் பணிக்கொடை திட்டத்திற்கு உதவும் வகையில் சந்தைப்படுத்தல் கருத்திட்டத்தினால் பதவியனியினர் பொருட்டு முதலீட்டு நிதி ஒன்று காணப்படுகின்றது.

4.3 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி

உரிய யாக்கங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் வழியேயுள்ள ஊழியர்கள் யாவருக்கும் ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றிற்கு பங்களிப்புச் செய்வதற்கு தகைமை கொண்டுள்ளனர். ஊழியர்கள் சேமலாபநிதி மற்றும் நம்பிக்கை நிதி என்பவற்றிற்கு பங்களிப்பு செய்வதானது அவர்களது வருமானக் கூற்றுக் கணக்கில் செலவாக காணப்படுகின்றன. ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதி என்பவற்றின் பேரில் அதிகார சபையின் பங்களிப்பானது முறையே 12% மற்றும் 3% ஆகும்.

4.4 ஹதபிம அதிகாரசபைக்கு எதிராக விசாரணைக்குட்பட்டுள்ள வழக்குகளின் விபரம்

இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழகுகளின் விபரம் வருமாறு.

	வழக்கு இலக்கம்	விபரம்	நீதிமன்றம்	தற்போதைய நிலமை
1	7380/Land	காணி தொடர்பான	மாவட்ட நீதிமன்றம் கேகாலை	
2	7788/Land	காணி தொடர்பான	மாவட்ட நீதிமன்றம் கேகாலை	விசாரனை நடைபெறுகிறது
3	DLM/20/20	வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவு சபை கையளிப்பு தொடர்பாக 1. தடை உத்தரவு 2. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது	மாவட்ட நீதிமன்றம் கண்டி	விசாரனை நடைபெறுகிறது
4	DMR 1930/20	வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவு சபை மூலம் இழப்பீடு கோரல்	மாவட்ட நீதிமன்றம் கண்டி	விசாரனை நடைபெறுகிறது
5	ඒ/67/2018	சந்தைப்படுத்தல் நிலைய ஊழியர்கள் ஹதபிம அதிகாரசபைக்கு எதிராக தொடுத்துள்ள வழக்கு	தொழிலாளர் தீர்ப்பாயம்	விசாரனை நடைபெறுகிறது

4.5. வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவு சங்கம் பெற்ற தடை உத்தரவுக்கு எதிராக ஹதபிம அதிகாரசபையின் மேன்முறையீடு

வழக்கு இலக்கம்	விபரம்	நீதி மன்றம்	தற்போதைய நிலமை
CP/HC/CA/LA/19/29	இலக்கம் DML 20/20 கொண்ட தடையுத்தரவுக்கு மேன்முறையீடு செய்வதன் பொருட்டு வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவு சங்கத்திற்கு எதிராக இலங்கை ஹதபிம அதிகாரசபை வழக்கு தொடுத்துள்ளது.	கண்டி மாகாண உயர்நீத மன்றம்	விசாரனை நடைபெறுகிறது

05. ஏற்பாடுகள் மற்றும் ஏனைய தகவல்கள்

5.1 அறவிட முடியாக் கடனுக்கான ஏற்பாடுகள் - கம்பொலை இல்லக் கடன்

5.2 2019 ஜனவரி 31 ஆம் திகதி முதல் சந்தை கருத்திட்டம் ஹதபிம கூட்டுறவு சங்கத்திற்கு கையளிக்கப்பட்டு இருந்தது. ஹதபிம அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் மற்றும் குத்தகை ஒப்பந்ததிற்கும் அமைய அவர்களினால் ஹதபிம அதிகார சபையினால் சகல நீர், மின்சாரம், தொலைபேசி கட்டணங்களையும் செலுத்த வேண்டும். ஆயினும் அவர்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகின்ற போது நீர் பற்றுச்சீட்டின் பொருட்டு ரூபா 54,522.07 உம் மின்சார பற்றுச்சீட்டின் பொருட்டு ரூபா 210,653.16 உம் தொடர்பாடல் பற்றுச்சீட்டின் பொருட்டு 87,391.99 ரூபாவும் செலுத்தப்பட்டு இருக்க வில்லை.

5.3. வராபிடிய விற்பனை நிலையத்தின் முழுமையான கணக்கு இணைப்பு 1 இல் சமரப்பிக்கப்பட்டுள்ளன.

5.4. சந்தை மேம்பாட்டு கருத்திட்டத்தின் ஊடாக நடாத்திச் செல்லப்படுகின்ற நிலையான, சேமிப்பு மற்றும் நடைமுறைக்கணக்குகளின் நிதி வரையறுக்கப்பட்ட ஹதபிம கூட்டுறவு சங்கத்திற்கு மாற்றப்படாத நிலையில் 2022.12.31 ஆம் திகதி ஆகின்ற போது அந்த கணக்குகளின் மீதி இணைப்பு 02 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5.5 இலங்கை ஹதபிம அதிகாரசபை மற்றும் கூட்டுறவு சங்கத்தின் 2019.01.23 ஆம் திகதி மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் குத்தகை ஒப்பந்தத்தின்படி சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்கு அமைய நிலையான சொத்துக்கள் கூட்டுறவு சங்கத்தில் பயன்பாட்டின் பொருட்டு தற்காலிகமாக சாட்டப்பட்டுள்ளது. அந்த சொத்துக்களின் சிற்றளவிலான பொருட்கள் ஹதபிம கூட்டுறவு சங்கத்தின் பயன்படுத்தப்படுவதுடன் ஏனைய பொருட்கள் அதிகார சபையின் பிரதான பணிமனையில் மற்றும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இணைப்பு 02

இலங்கை ஹதபிம அதிகாரசபை

2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை

2021 (ரூ)		உப அட்டவணை	2022 (ரூ)
மொத்தம்	வருமானம்		ஹதபிம அதிகாரசபை
94,380,000.00	திறைசேறி கொடை - மீண்டுவரும்	01	113,090,000.00
100,000,000.00	திறைசேறி கொடை - மூலதன		76,700,000.00
	அமைச்சு நிதி விஷேட		
2,966,652.84	ஏனைய வருமானம்	02	3,897,182.82
14,397,898.82	தேய்மானம்		9,680,581.06
1,950.00	இல்லப் பொருள் மற்றும் பொருத்துக்கள் விற்பனையின் இலாபம்		1,200.00
5,220.00	அலுவலக உபகரண விற்பனை இலாபம்		5,360.00
600.00	அலுவலக உபகரண விற்பனை இலாபம்		1,200.00
	அலுவலக உபகரண விற்பனை இலாபம்		800.00
700.00	இல்லப் பொருள் மற்றும் உபகரணங்கள் விற்பனையின் இலாபம்		350.00
	விவசாய உபகரண விற்பனை இலாபம்		5,600.00
5,775.00	பல்வேறு வருமானங்கள்		6,225.00
3,950.00	பல்லேகலை பண்ணையின		5,445.00
-	கொத்மலை பண்ணை		1,250.00
211,762,746.66			**203,395,193.88**
	கழி - செலவுகள்		
65,185,703.84	ஆளுக்குரிய வேதனாளிகள்	03	77,525,563.58
1,737,328.24	போக்குவரத்து பிரதியீடு		2,683,572.88
3,846,055.51	வழங்கள்கள் போக்குவரத்து		12,151,585.30
12,803,972.29	பராமரிப்பு செலவு		14,019,911.51
1,737,211.06	ஏனைய		2,669,103.69
14,397,898.82	தேய்மானம்		9,680,581.06
1,412,013.47	பல்லேகலை பண்ணையின் நட்டம்		7,187,961.39
3,130,475.51	கொத்மலை பண்ணை நட்டம்		994,271.39
88,573,663.47	அபிவிருத்திச் செலவு	04	61,202,906.09
60,000.00	வெளியேற்றம்		
192,884,322.21	**மொத்த கண்காணிப்பு செலவு**		**188,115,456.89**
18,878,424.45	**கண்காணிப்பு செயற்பாடுகளின் மேலதிகம்/பற்றாக்குறை**		15,279,736.99
(6,082,380.93)	2022. 01. 01 திகதியன்று மீதி கொ.வந்தது		9,362,511.02
12,796,043.52	**காலத்திற்குரிய தேறிய மேலதிகம்/பற்றாக்குறை**		**24,642,248.01**

இலங்கை ஹதபிம அதிகாரசபை

2022.12.31 ஆம் திகதி அன்றுள்ளவாறான நிதிப்பாய்ச்சல்கூற்று

	2022 ரூபா
இயக்கச் செயற்பாடுகளின் நிதிப்பாய்ச்சல் கூற்று	
இயக்கச் செயற்பாட்டின் மேலதிகம்/பற்றாக்குறை	15,279,736.99
முன்னய வருட சென்மையாக்கல்கள்	(3,433,532.50)
சென்மையாக்கல்கள்	(1,236,442.79)
நட்டஈடு	1,605,294.00
தேய்மானம்	9,680,581.06
	21,895,636.76
நிதியல்லா அசைவுகள்	
கொடைக்கான ஏற்பாடு	2,472,107.50
உறப்படும் செலவுகளின் ஏற்ற இறக்கங்கள்	(358,654.60)
செலுத்தல்களின் ஏற்ற இறக்கங்கள்	(4,348,315.37)
முன்னய கொடுப்பனவுகளின் ஏற்ற இறக்கங்கள்	-
கையிறுப்பகளின் ஏற்ற இறக்கங்கள்	(16,293,045.45)
ஏனைய பெறுகைகளின் ஏற்ற இறக்கங்கள்	(1,289,047.94)
இயக்கச் செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்	**(19,816,955.86)|**
முதலீட்டு செயற்பாடுகளின் நிதிப்பாய்ச்சல் கூற்று	
சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள்	(19,598,834.23)
உயிரியல் சொத்துக்கள்	203,700.00
முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய நிதிப்பாய்ச்சல் கூற்று	**(19,395,134.23)**
நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்	
மூலதன கொடை	7,648,599.31
வாகனக்கடன்	(80,208.28)
வராபிடிய விற்பனை நிலையத்தில் கடன்பட்டோர்	2,100,000.00
நிதிச் செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்	**9,668,391.03**
காசு மற்றும் காசு சம்பந்தமானவைகளின் தேறிய அதிகரிப்பு/குறைப்பு	(7,648,062.30)
2022.01.01 ஆம் திகதி அன்று காசு மற்றும் காசு சம்பந்தமானவை	28,801,001.30
2021.12.31 ஆம் திகதி அன்று காசு மற்றும் காசு சம்பந்தமானவை	**21,152,939.00**

	2022 - 01- 01	**2022 -12 - 31**
பணிமனை நடைமுறை கணக்கு	21,175,325.30	16,527,263.00
	7,625,676.00	4,625,676.00
வாரநாள் வைப்புக்கள்	**28,801,001.30**	**21,152,939.00**

இலங்கை ஹதபிம அதிகாரசபை

2022 டிசம்பர் 31 ஆம் திகதி அன்றுள்ளவாறான

உரிமை மாற்றங்களின் கூற்று

விபரம்	கொடை கணக்கு	ஒதுக்கீட்டு கணக்கு	மூலதன ஒதுக்கீடு	GTZ கொடை	மீள் மதிப்பட்டுக் கணக்கு	மேலதிகம்/பற்றாக்குறை	மொத்தம்
